<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்</u>

முன்னிலை – திரு. எம். விக்னேஷ் பிரபு, எம்.எல்.,
கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு.

2026–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ஆம் நாள் புதன்கிழமை

**<u>அசல் வழக்கு எண்.192/2025</u>**

CNR.No.TNTM04-000529-2025

பெருமாள்சாமி . . . வாதி

// எதிர் //

1. கங்காவிஷ்ணு,
2. குபேந்திரன், . . . பிரதிவாதிகள்

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் 23.03.2026ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.ஆனந்தன் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் அழைத்தும் ஆஜரில்லாத காரணத்தால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், வாதி தரப்பு வாதுரையை கேட்டும், சான்றாவணங்களைப் பரிசீலித்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

## <u>தீர்ப்புரை</u>

தாவா வாதிக்கு சேர வேண்டிய தாவா தொகையான ரூ.3,82,480/–ம் மற்றும் அசல் தொகை ரூ.2,25,000/–க்கு பின்வட்டியும் கோர்ட் செலவும் வாதிக்கு பிரதிவாதிகள் கொடுக்கும்படி தீர்ப்பளிக்கக்கோரி வாதியால் வழக்கு தாக்கல்.

2. **<u>வாதி தாக்கல் செய்துள்ள வழக்குரையின் சுருக்கம்</u>**

பிரதிவாதிகள் வாதியிடமிருந்து கடந்த 03.09.2022ஆம் தேதியில் குடும்பச்செலவுக்காகவும், 2ஆம் பிரதிவாதியின் திருமண செலவுக்காகவும்,



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.01 16:01:24 +0530

ரூ.2,25,000/− கடனாக ரொக்கமாக பெற்றுக்கொண்டு பைசல் செய்வதற்கு வசதியாக ரூ.1,00,000/−க்கு ஒரு அண்டிபாண்டும் (A பாண்டு), மற்றொரு ரூ.1,00,000/−க்கு ஒரு அண்டிபாண்டும் (B பாண்டு), ரூ.25,000/−க்கு ஒரு அண்டிபாண்டும் ( C பாண்டு) என மூன்று அண்டி பாண்டுகளை எழுதிக்கொடுத்துள்ளனர் என்றும், மேற்படி அண்டிபாண்டு கடனுக்காக ரூ.100/−க்கு மாதம் ஒன்றுக்கு ரூ.2/− வீதம் வட்டி செலுத்துவதாக ஒப்புக்கொண்டும் மேற்படி தொகையை வாதி வேண்டும்போது அவரிடமோ அல்லது அவரிட உத்தரவு பெற்றவரிடமோ அசல் மற்றும் வட்டியுடன் பைசல் செய்வதாக ஒப்புக்கொண்டு தக்க சாட்சிகள் முன்னிலையில் சரியான பிரதிபலன் பேரில் மேற்படி A, B மற்றும் C பாண்டுகளை எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றும், வாதி மேற்படி பாண்டு பாக்கியை பைசல் செய்யுமாறு பிரதிவாதிகளை பலமுறை நேரில் அனுகி கேட்டுக்கொண்டு வந்ததற்கு பிரதிவாதிகள் மேற்படி அண்டிபாண்டுகளில் கண்ட தொகையை பைசல் செய்துவிடுவதாக காலம் கடத்தி வந்து பின்னிட்டு எந்தவித சரியான பதிலும் கூறாமலும், எந்தவிதமான வட்டியோ அசலோ கொடுக்காமல் காலம் கடத்தி வந்தனர் என்றும், இருப்பினும் பிரதிவாதிகள் மீது இருந்த நம்பிக்கையின் பேரில் இதுநாள்வரையில் வாதி இருந்துவந்துள்ளார் என்றும், ஆனால் இனிமேற்கொண்டும் மேற்கண்ட தொகையை செலுத்துவதற்கான எந்தவித முயற்சியில் பிரதிவாதிகள் ஈடுபடுவதாக தெரியவில்லை என்றும், அதனால் வாதி வேறு வழியின்றி கடந்த 18.06.2025 தேதியிட்டு பிரதிவாதிகளுக்கு சட்டப்படியான வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி அதில் மேற்கண்ட அண்டிபாண்டுகளுக்கு உண்டான அசல் மற்றும் வட்டி ஆகியவைகளை கேட்டுக்கொண்டிருந்தார் என்றும், அந்த அறிவிப்பினை பெற்றுக்கொண்ட பிரதிவாதிகள் இதுநாள் வரையில் எந்தவித பதிலறிவிப்போ பைசல் செய்வதற்கான முயற்சியிலோ ஈடுபடவில்லை என்றும், மேற்படி



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.01 16:01:30 +0530

பிரதிவாதிகள் சிறு விவசாயி அல்ல என்றும், ஒரே நேரத்தில் தாவா பாண்டு பாக்கியை செலுத்தக்கூடிய வசதி உடையவர் என்பதால் அவருக்கு கடன் நிவாரணச்சட்டம் எதுவும் பொருந்தாது என்றும், அதனால் அண்டிபாண்டுகளில் உள்ள வட்டி விகிதப்படி கடனை திருப்பிச்செலுத்த பிரதிவாதிகள் கடமைப்பட்டவர்கள் ஆவார்கள் என்றும், தாவா வாதிக்கு சேர வேண்டிய தாவா தொகையான ரூ.3,82,480/−ம் மற்றும் அசல் தொகை ரூ.2,25,000/−க்கு பின்வட்டியும் கோர்ட் செலவும் வாதிக்கு பிரதிவாதிகள் கொடுக்கும்படி தீர்ப்பளிக்கக்கோரி வாதியால் வழக்கு தாக்கல்.

3. பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் 31.10.2025−ம் தேதியன்று பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

4. வாதி தரப்பில் வாதி திரு.பெருமாள்சாமி அவர்கள் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.1−ன் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் வாய்மொழி சாட்சியம் மற்றும் ஆவணசாட்சியங்கள் இல்லை.

5. இவ்வழக்கில் வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனையாகும்.

6. வாதி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில் வாதி தாக்கல் செய்துள்ள தாவாவினை வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட வா.சா.1ன் சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்களைக் கொண்டு நிருபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே வாதி தாக்கல் செய்துள்ள தாவாவினை அனுமதித்து தீர்ப்பளிக்குமாறு வாதிட்டார்.

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.01 16:01:35 +0530

7. வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது, ஆவணங்கள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. வாதி பிரதிவாதிகளுக்கு எதிராக தாவாவில் கண்டுள்ள தொகையினை அசல் வட்டியுடன் திருப்பி செலுத்தும்படிக்கு தீர்ப்பளிக்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தாவா பாண்டுகளானது 03.09.2022 அன்று ஏற்பட்டுள்ளது. வாதி இத்தாவாவினை 02.09.2025அன்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். அந்த வகையில் வாதியின் இத்தாவாவானது காலாவதிதோஷத்தால் பாதிக்கப்படவில்லை. தாவா 3 பாண்டுகளில் 03.09.2022 தேதியன்று வாதியிடம் பிரதிவாதிகள் முறையே ரூ.1,00,000/-, ரூ.1,00,000/- மற்றும் ரூ.25,000/- என மொத்தமாக ரூ.2,25,000/- குடும்பச்செலவிற்காக கடன் வாங்கியதாக உள்ளது. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரை, வாதியான வா.சா.1ன் சாட்சியம் மற்றும் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான பிராமிசரி நோட்டினை நன்கு பரிசீலனை செய்து பார்க்கும்பொழுது 03.09.2025 தேதியன்று ரூ.2,25,000/-ம், வாதியிடம் பிரதிவாதிகள் குடும்பச்செலவிற்காக கடன் பெற்றுக்கொண்டு அதற்கு மறுபயனாக வாதிக்கு பிரதிவாதிகள் தாவா மூன்று பாண்டுகளை எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்பது மிகத்தெளிவாக தெரியவருகிறது. வாதி தாக்கல் செய்துள்ள தாவாவில் கூறியுள்ள சங்கதிகளை மறுத்து பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்து எதிர்வாதம் செய்யவில்லை. மாறாக பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாத காரணத்தினால் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டுள்ளார்கள். வாதியான வா.சா.1 தனது வழக்குரையை ஒத்துரைத்தே முதல்விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்து சாட்சியம் அளித்துள்ளார். வாதி இத்தாவாவினை தாக்கல் செய்வதற்கு முன்பாக பிரதிவாதிகளுக்கு வா.சா.ஆ.4 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். அந்த அறிவிப்பினை பிரதிவாதிகள்



M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.01 16:01:40 +0530

பெற்றுக்கொண்டு அதிலுள்ள சங்கதிகளை மறுத்து எந்தவொரு பதிலறிவிப்பும் கொடுக்கவில்லை என்பது தாவா ஆவணங்களிலிருந்து அறிய முடிகிறது.

8. வாதியிடம் பிரதிவாதிகள் சரியான பிரதிபிரயோஜனத்துடன் கொடுக்க வேண்டிய தொகைக்காக ரூ.2,25,000/-க்கு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான பிராமிசரி நோட்டுகளை வாதிக்கு பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்துள்ளார் என்பதும், தாவாவில் கண்ட தொகையினை அசல் வட்டியுடன் செலுத்தாததால் வாதி பிரதிவாதிகளுக்கு எதிராக இத்தாவாவினை தாக்கல் செய்துள்ளார் என்பது மிகத்தெளிவாக நிரூபணமாகிறது. வாதி தனது தாவாவில் தெரிவித்துள்ள சங்கதிகளை வா.சா.1 ன் சாட்சியம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்களைக் கொண்டு நிருபித்துள்ளதால் தாவாவில் கண்ட தொகையை அசல் வட்டியுடன் வாதிக்கு பிரதிவாதிகள் செலுத்த கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். எனவே வாதி தாவாவில் கோரியுள்ளபடி பிரதிவாதிகள் வாதிக்கு தாவா தொகை ரூ.3,82,480/-ம் செலுத்த வேண்டும் என்றும், அசல் தொகை ரூ.2,25,000/-க்கு வழக்கு தாக்கல் செய்த நாளிலிருந்து தீர்ப்பான நாள் வரை 12% வட்டியும், தீர்ப்பிற்கு பின்னிட்டு வசூலாகும் நாள்வரை 6% வட்டியும் செலுத்த வேண்டுமென்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

இறுதியாக, வாதி தாக்கல் செய்துள்ள இத்தாவாவானது செலவுத்தொகையுடன் அனுமதித்து பிரதிவாதிகள் வாதிக்கு தாவா தொகை ரூ.3,82,480/-ம் செலுத்த வேண்டும் என்றும், அசல் தொகை ரூ.2,25,000/-க்கு வழக்கு தாக்கல் செய்த நாளிலிருந்து தீர்ப்பாணை நாள்வரை 12% வட்டியும், தீர்ப்பிற்கு பின்னிட்டு, வசூலாகும் நாள்வரை 6% வட்டியுடன் செலுத்தவேண்டுமென்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.01 16:01:44 +0530

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு ஏப்ரல் 1ஆம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.01 16:01:51 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு.

**வாதி தரப்பு சாட்சி :**

வா.சா.1 – திரு.பெருமாள்சாமி, த/பெ. ஜெகதீச முதலியார்,

**வாதி தரப்பு சான்றாவணங்கள் :**

| | | |
|---|---|---|
| 1. வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 | 03.09.2022 | பிரதிவாதிகள் வாதிக்கு எழுதிக்கொடுத்த அண்டிபாண்டு அசல். (எண்ணிக்கை – 3) |
| 2. வா.சா.ஆ.4 | 18.06.2025 | வழக்கறிஞர் அறிவிப்பு |
| 3. வா.சா.ஆ.5 மற்றும் வா.சா.ஆ.6 | – | அஞ்சலக ஒப்புகை அட்டைகள் (எண்ணிக்கை– 2) |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்ள் : இல்லை.**

M VIGNESH PRABU
Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.04.01 16:01:57 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
செய்யாறு.